டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in
கல்யாண் வெல்லர்ஸ்
agridoctor.in | 18.11.2026 புதன்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 126 | Madurai | Online Edition

2025-26-ம் ஆண்டின் தோட்டக்கலைப் பயிர்கள் உற்பத்தி 3,869.15 லட்சம் டன்னாக இருக்கும்!

மத்திய அரசு தகவல்

புது தில்லி, நவ.17

2025-26-ம் ஆண்டிற்கான தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பளவு, உற்பத்தி தொடர்பான 3-வது முன்கூட்டிய மதிப்பீடுகளை மத்திய வேளாண்மை, விவசாயிகள் நலன், ஊரக மேம்பாட்டுத்துறை அமைச்சர் சிவ்ராஜ்சிங் சௌகான் வெளியிட்டார். இது நாட்டின் விவசாயிகளுக்கு ஊக்கமளிக்கும் செய்தியாக உள்ளது. அண்மைக்கால மதிப்பீடுகளின்படி, நாட்டின் மொத்த தோட்டக்கலைப் பயிர்கள் உற்பத்தி 2025-26-ம் ஆண்டில் 3,869.15 லட்சம் டன்னாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது 2024-25-ம் ஆண்டில் பதிவான 3,707.38 லட்சம் டன்களுடன் ஒப்பிடும்போது 161.77 லட்சம் டன்கள் அல்லது 4.36 சதவீதம் அதிகமாகும். இந்த வளர்ச்சி மதிப்பீடு குறித்து மகிழ்ச்சி தெரிவித்துள்ள அமைச்சர் சிவ்ராஜ்சிங் சௌகான், தோட்டக்கலைப் பயிர்கள் உற்பத்தியில் ஏற்பட்டுள்ள இந்த உயர்வு, விவசாயிகளின் கடின உழைப்பையும், பிரதமர் மோடியின் தலைமையின் கீழ் விவசாயிகளுக்கான அரசின் கொள்கைகளின் தாக்கத்தையும் பிரதிபலிப்பதாகக் கூறினார்.

இந்த சாதனை அளவிலான உற்பத்தி நாட்டின் ஊட்டச்சத்து பாதுகாப்பை வலுப்படுத்துவதோடு, தோட்டக்கலைப் பயிர்கள் விவசாயிகளின் வருவாயை அதிகரிக்கவும் நேரடியாக பங்களிக்கும் என்றும் தெரிவித்தார். விவசாயிகளின் முயற்சிகளைப் பாராட்டிய அவர், இந்திய வேளாண் சமூகத்தின் அர்ப்பணிப்பையும், கடின உழைப்பையும் இந்த வளர்ச்சி பிரதிபலிப்பதாக கூறினார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவர்கள் நெல் நடவு விழா



கோயம்புத்தூர், நவ.17

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவையில் இளங்கலை வேளாண்மை (மேதமை) மூன்றாம் ஆண்டு மற்றும் இளங்கலை வேளாண்மை (மேதமை) இரண்டாம் ஆண்டு படிக்கும் மாணவர்கள் நன்செய் பண்ணையில் நெல் நடவு செய்தனர். இளங்கலை (வேளாண்மை) படிக்கும் மாணவர்கள் தாங்கள் படித்த அறிவியல் தொழில்நுட்பங்களைக் கொண்டு தானாக நெற்பயிர் பயிரிடவேண்டும். மாணவர்களுக்கு 4 சென்ட் அளவு நிலம் வழங்க படும். அதில் சேற்றுழவு முதல் அறுவடை முதலான அனைத்து பணி களையும் செய்ய வேண்டும். நெற்பயிர் நடவு நன்செய் பண்ணை யில் மாணவர்கள் நடவுப் பணியை செய்ய துவங்கினர். தொடக்க விழாவில் கலந்து கொண்ட பல்கலைக்கழக உயர் அதிகாரிகள், துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களை பாடப் பேராசிரியர்கள் முனைவர் S.D.சிவகுமார் வரவேற்றார்.

முனைவர் R.கிருஷ்ணன், பேராசிரியர் மற்றும் தலைவர், உழவியல் துறை, மாணவர்கள் மேற்கொள்ள வேண்டிய மேலாண்மை முறைகள் குறித்து விளக்கம் அளித்தார். முனைவர் னி.ரவீந்திரன், பதிவாளர் மற்றும் துணை வேந்தர் (பொ), விழாவின் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு நெல் நடவு விழாவை தொடங்கி வைத்தார். மேலும் இவ்விழாவில் முனைவர் C.பாபு, முதன்மையர் (வேளாண்மை) (பொ), முனைவர் P.ராஜ்குமார், இயக்குநர் (பொ), பயிர் மேலாண்மை இயக்குநரகம், ஆகியோர் நடவு விழாவில் கலந்து கொண்டு மாணவர்களுடன் கலந்துரை யாடினார்கள். பின்பு பல்கலைக்கழக உயர் அதிகாரிகள், துறைத் தலைவர்கள் மற்றும் பேராசிரியர்கள் வயலில் இறங்கி மாணவர் களுடன் சேர்ந்து நெல் நடவை தொடங்கி வைத்தனர்.

பாட பேராசிரியர் முனைவர்கள் S.D.சிவகுமார், K.ரமா, N.சக்தி வேல், G.பிரபுகுமார், S.P.சங்கீதா, D.அஜித், A.P.சிவமுருகன் மற்றும் G.செந்தில்குமார் ஆகியோர் நெல் நாற்று நடவு விழாவினை ஏற்பாடு செய்தனர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

ஜெயங்கொண்டம் வட்டார வேளாண்மை இணை இயக்குநர் ஆய்வு



அரியலூர், நவ.17

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் வட்டாரத்தில் வேளாண்மை இணை இயக்குநர் அரியலூர் உலகம்மை முருகக்கனி, ஆய்வு மேற்கொண்டார். ஜெயங்கொண்டம் வட்டாரத்தில் சம்பா பருவ இணையதள விதை பண்ணை பதிவு சார்ந்த இலக்கினை ஆய்வு செய்து விரைந்து முடித்திட அறிவுரை வழங்கினார். த.வளவெட்டிக்குப்பத்தில் உள்ள விதை சுத்திகரிப்பு நிலையத்தை ஆய்வு விதை சுத்திகரிப்பு பணி விரைந்து செயல்பாட்டிற்கு கொண்டு வர அறிவுரை வழங்கினார். ஜெயங்கொண்டம் வட்டாரம் கீழகுடியிருப்பு கிராமத்தில் சம்பா பருவத்தில் நடப்பட்ட நெல், இலுப்பை பூ சம்பா, யுனுவு-54 ஆகிய இரக விதைப் பண்ணையினை ஆய்வு செய்து விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கினார். மேலும் ஜெயங்கொண்டம் வட்டாரத்தில் உள்ள வருவாய் கிராமங்கில் உள்ள அனைத்து விவசாய நிலங்களுக்கும் விவசாயிகள் நில உடைமை பதிவு (குயசஅநச சுநபளை வசயவழைஜ) ஆகியவை விரைந்து முடித்திடவும் உதவி வேளாண்மை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார். இந்த ஆய்வில் வேளாண்மை அலுவலர் மா.மகேந்திரவர்மன், உதவி விதை அலுவலர் மணிகண்டன் மற்றும் வேளாண் உதவி அலுவலர் ராம்குமார், பாலாஜி ஆகியோர் உடனிருந்தனர்.

காளான் வளர்ப்புப் மற்றும் அதனைக் கையாளும் முறை குறித்து செய்முறை விளக்கம் அளித்த மாணவர்கள்



சேலம், நவ.17

பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் வேளாண்மை கல்லூரி, மாணவர்கள் கிராமத்தில் தங்கி பயிற்சி பெரும் திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டம், வீரபாண்டி வட்டத்தில் உள்ள நைனாம்பட்டி கிராமத்தில் காளான் வளர்ப்புப் மற்றும் அதனைக் கையாளும் முறை குறித்து செய்முறை விளக்கம் அளித்தனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது அக்ரி டாக்டர் வாசகர் என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

கார்த்திகை பட்ட நிலக்கடலை சாகுபடியில் அதிக விளைச்சல் பெற விதைப்பரிசோதனை செய்வது அவசியம்!

இராமநாதபுரம், நவ.17

இராமாநாதபுரம் மாவட்டத்தில் உள்ள கமுதி, கடலாடி, உச்சிப்புளி மற்றும் திருப்புல்லாணி வட்டாரங்களில் கார்த்திகை மற்றும் மார்கழி பட்டத்தில் பெருமளவில் நிலக்கடலை பயிர் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

நிலக்கடலை சாகுபடி செய்யும் விவசாயிகள் அதிக விளைச்சல் பெற தரமான விதைகளை தேர்வு செய்து விதைப்புக்குப் பயன் படுத்த வேண்டும். தற்பொழுது கதிரி-1812, தரணி, ஜிஜெஜி-32, விஆர்ஜ-9, விஆர்ஜ-10, ஆகிய நிலக்கடலை இரகங்கள் பரவலாக சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இவற்றில் ஏதாவது ஒரு ரகத்தினை தேர்வு செய்து திடமான விதைகளை ஏக்கருக்கு 50 முதல் 55 கிலோ என்றளவில் 30 செ.மீ வீதம் வரிசைக்கு வரிசை மற்றும் செடிக்கு செடி 10 செ.மீ இடைவெளியில் விதைகளை விதைப்பு செய்ய வேண்டும்.

நிலக்கடலை ஏக்கருக்கு 7:14:21 என்ற விகிதத்தில் தழை, மணி, சாம்பல் சத்து இடவேண்டும். நிலக்கடலையில் உற்பத்தியினை அதிகரித்து திரட்சியான காய்களை பெற ஏக்கருக்கு 400 கிலோ ஜிப்சத்தை அதாவது 200 கிலோ ஜிப்சத்தை அடியுரமாக விதைப் பதற்கு முன்னரும் மீதமுள்ள 200 கிலோவைப் பயிர் பூக்கத் தொடங்கும் போது அதாவது விதைத்த 30-40 நாட்களுக்குள் மழை வந்தவுடன் மேலுரமாக இட்டு மண் அணைக்க வேண்டும்.

மேலும் தற்பொழுது வடகிழக்குப் பருவமழை பெய்து வருவதால் நிலக்கடலை சாகுபடி செய்திடும் விவசாயிகள் முன்கூட்டியே விதைப் பரிசோதனை செய்து விதையின் தரம் அறிந்து கொள்ளலாம். விதையின் தர நிர்ணயக் காரணிகளான முளைப்புத்திறன், புறத் தூய்மை, பிறரக விதைக்கலப்பு மற்றும் ஈரப்பதம் ஆகியற்றை பரிசோதனை செய்த பின்னரே விதைப்புக்கு பயன்படுத்த வேண்டும். தரமான நிலக்கடலை விதை என்பது குறைந்தபட்சம் 70 சதவீதம் முளைப்புத்திறனும். அதிகபட்சமாக 9% ஈரப்பதமும், குறைந்தபட்ச மாக 96% புறத்தூய்மையும் இருத்தல் அவசியம். ஆகவே நிலக் கடலை விவசாயிகள் விதைப்பதற்கு முன்பு பரமக்குடி ஒழுங்கு முறை விற்பனைக்கூட வளாகத்தில் இயங்கி வரும் பரமக்குடி விதைப் பரிசோதனை நிலையத்தில் ரூ 80/- கட்டணமாக செலுத்தி விதைகளை பரிசோதனை செய்து கொள்ளுமாறு விதைப்பரிசோதனை அலுவலர் சி.சிவகாமி மற்றும் வேளாண்மை அலுவலர்கள் ச.முருகேஷ்வரி மற்றும் ப.வீரபாண்டியன் ஆகியோர் கேட்டுக்கொண்டனர்.

முந்திரி வெட்டு இயந்திரம் மானிய விலையில் வழங்கிட வேளாண்மை உதவி இயக்குநர் அழைப்பு

புதுக்கோட்டை, நவ.17

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை வட்டாரத்தில், முந்திரி வெட்டு இயந்திரத்திற்கு மானியம், தேசிய தோட்டக்கலை இயக்கம் (NHM) 2026-27 சிறப்பு தலையீடு தமிழ்நாடு அரசின் வேளாண் மற்றும் உழவர் நலத்துறை, தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் கீழ் சிறப்பு தலையீடு திட்டத்தின் மூலம் முந்திரி விவசாயிகளுக்கு முந்திரி வெட்டு இயந்திரம் வாங்குவதற்கு மானியம் வழங்கப்படுகிறது.

இந்த திட்டத்தின் கீழ், முந்திரி வெட்டு இயந்திரத்தின் விலையில் 50 சதவீதம் (ரூ. 6,000) மானியமாக வழங்கப்படுகிறது. ஒரு பயனாளிக்கு அதிகபட்சமாக ரூ. 6,000 மட்டுமே மானியமாக வழங்கப்படும்.

இந்தத் திட்டத்தில் கந்தர்வக்கோட்டை வட்டாரத்திற்கு 26 எண்களும், அறந்தாங்கி வட்டாரத்திற்கு 13 எண்களும், கறம்பக் குடி வட்டாரத்திற்கு 17 எண்களும், குன்றாண்டார்கோவில் வட்டாரத்திற்கு 10 எண்களும், புதுக்கோட்டை வட்டாரத்திற்கு 16 எண்களும், திருவரங்குளம் வட்டாரத்திற்கு 18 எண்கள் என மொத்தம் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு 94 எண்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

முந்திரி பருப்பை கையால் வெட்டுவதால் ஏற்படும் உழைப்பு, நேரம் மற்றும் பாதுகாப்பு அபாயங்களைக் குறைக்கவும், முந்திரி பதப்படுத்துதலில் இயந்திரமயமாக்கலை ஊக்குவிக்கவும் இந்த உதவித்தொகை வழங்கப்படுகிறது. முந்திரி வெட்டுதல் மற்றும் உரித்தல் பணிகளில் படிப்படியான இயந்திரமயமாக்கலை மேற் கொள்ள இந்தத் திட்டம் உதவுகிறது.

எனவே முந்திரி சாகுபடி செய்யும் விவசாயிகள், தங்கள் பகுதியில் உள்ள தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகம் மூலம் இந்த மானியத்திற்கு விண்ணப்பிக்கலாம்.


விண்ணப்பத்துடன் ஆதார் அட்டை, வங்கி பாஸ்புக், குடும்ப அட்டை மற்றும் தேவையான மற்ற ஆவணங்களை இணைக்க வேண்டும் என தெரிவித்தார்.

விளைநிலம் காப்போம் நிகழ்ச்சி



கடலூர், நவ.17

கடலூர் மாவட்டம், வேளாண்மை அறிவியல் நிலையம் விருத்தாசலம் சார்பாக 17.11.26 அன்று, கடலூர், விருத்தாசலம் மற்றும் ஸ்ரீமுஷ்ணம் வட்டாரத்தில் உள்ள திருபனங்பாக்கம், டி.வி.புதூர் மற்றும் குணமங்கலம் ஆகிய கிராமங்களில், விளைநிலம் காப் போம் நிகழ்ச்சி நடைப்பெற்றது. இந்நிகழ்ச்சியை மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் க.நடராஜன், துவக்கி வைத்து, மண்வளம் பாதுகாக்கும் வழிமுறைகள் பற்றி எடுத்துரைத்தார். இதில் முனைவர்கள் கண்ணன், கமலக்கண்ணன் மற்றும் சிவசங்கர் ஆகியோர் கலந்துக்கொண்டு, நிலங்களின் சத்துக்களுக்கு ஏற்ற வாறு உர பரிந்துரையும், யூரியா மற்றும் டி.ஏ.பி அதிகமாக பயன் படுத்துவதால் நிலத்திற்கு ஏற்படும் தீமைகளை பற்றி விளக்கினார். உயிர் உரங்கள், பசுந்தாள் உரங்கள் மற்றும் தொழுஉரங்கள் பயன் பாடுகளை அதிகரிப்பதன் மூலம் மண்ணில் பேரூட்டம் மற்றும் நுண்ணூட்ட சத்துக்கள் மேம்ப்பாடு பற்றியும் மற்றும் மண்ணிற்கு உரமிடும் போது மண்வள அட்டையில் பரிந்துரைத்த உர பரிந்துரை களை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தினார். இந்நிகழ்ச்சியில் வேளாண்மை துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துக் கொண்டு மத்திய மாநில திட்டங்கள் பற்றி தெளிவாக விவசாயிகளுக்கு விளக் கினர். இப்பயிற்சியில் கடலூர் மாவட்டம், கடலூர், விருத்தாசலம் மற்றும் ஸ்ரீமுஷ்ணம் வட்டாரத்தை சேர்ந்த 200-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துக் கொண்டு பயன் பெற்றனர்.



நூலக வார விழா வினை முன்னிட்டு 100க்கும் மேற்பட்ட மாணவர்களை உறுப்பினராக சேர்த்த பேராசிரியர் யுவராஜ் தட்சிணா மூர்த்தி.

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

நெல் சாகுபடியில் இலைச் சுருட்டுப் புழு தாக்குதலை கட்டுப்படுத்த வேளாண்மை இணை இயக்குநர் ஆலோசனை



புதுக்கோட்டை, நவ.17

புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்பொழுது நிலவும் தட்பவெப்ப நிலை காரணமாக சாகுபடி செய்யப்பட்டுள்ள நெற்பயிரில் செம்பேன், தண்டு துளைப்பான் மற்றும் இலைச்சுருட்டுப்புழு ஆகிய பூச்சிகளின் தாக்குதல் ஆங்காங்கே தென்படுவதால், விவசாயிகள் ஒருங் கிணைந்த முறையில் கட்டுப்படுத்திட வேளாண்மை இணை இயக்குநர் (பொ) ந.சண்முகஜெயந்தி ஆலோசனை தெரிவித்துள்ளார்.

செம்பேன்

செம்பேன் எனப்படும் சிவப்பு சிலந்தி தாக்குதலின்போது, இலையின் அடிப்பகுதியில் சிவப்பு அல்லது மஞ்சள் புள்ளிகள் தோன்றும். இலைகள் பழுப்பு நிறமாக மாறி காய்ந்து போகும் அல்லது முழுமையாக மஞ்சள் நிறமாகும். இலைகளின் மேற் பரப்பில் நுண்ணிய வலைகள் அல்லது வெளிரிய புள்ளிகள் காணப்படும். செம்பேன் தாக்குதலானது கோடை காலத்தில் அல்லது அதிக வெப்பம் உள்ள காலங்களில் அதிகமாக இருக்கும். எனவே நீர் மேலாண்மையை சரியாகப் பராமரிக்க வேண்டும். ஆரம்பத்தில் வேப்பெண்ணை கரைசல் 3% என்ற அளவில் தெளிக்கலாம். தாக்குதல் அதிகமாக தென்பட்டால் இதனைக் கட்டுப்படுத்திட புரொப்பர்கைட் மருந்து ஏக்கருக்கு 250 மி.லி என்ற அளவில் 200 லி நீரில் கரைத்து ஒட்டுப் பசை சேர்த்து இலைகளின் அடிப்பகுதி முழுவதும் நன்றாக நனையும்படி தெளிக்க வேண்டும். இதனை தேவைப்பட்டால் 7 முதல் 8 நாட்கள் இடைவெளியில் மீண்டும் ஒருமுறை தெளித்து கட்டுப்படுத்தலாம்.

தண்டு துளைப்பான் : குருத்துப்பூச்சி எனப்படும் தண்டு துளைப்பானின் தாக்குதலால் இளம்பயிரில் நடுக்குருத்து வாடிக் காய்ந்துவிடும். கதிர் பிடிக்கும் தருணத்தில் தாக்குதல் ஏற்படின் நெல்மணிகள் பால் பிடிக்காமல், வெண்கதிர்களாக மாறி மகசூல் பாதிப்படைகிறது. இதன் தாக்குதலைக் கட்டுப்படுத்திட நாற்று களை நெருக்கமாக நடுவதைத் தவிர்த்து தேவையான தழைச் சத்தினை மூன்று அல்லது நான்கு தடவையாகப் பிரித்து இடுதல் வேண்டும். முதிர்ந்த நாற்றுகளை நடும்போது நுனியைக் கிள்ளி விட்டு நடுவதனால் குருத்துப்பூச்சியின் முட்டைக் குவியல்களை அழித்துவிடலாம். விளக்குப் பொறியினை மாலை 6.30 மணி முதல் இரவு 10.00 மணி வரை ஒளிரவிட்டுக் குருத்துப் பூச்சியின் தாய் அந்துப்பூச்சிகளைக் கவர்ந்தழிக்கலாம்.



இலைச்சுருட்டுப் புழு : இலைச்சுருட்டுப் புழுக்கள் நெற்பயிரின் இலைகளை ஒன்றி ணைத்துக் கொண்டு அவற்றிலுள்ள பச்சை யத்தை சுரண்டி உண்பதால் இலைகளில் வெள்ளை வெள்ளையாக காணப்படும். இதன் தாக்குதல் வயல் ஓரங்களில் நிழலான பகுதிகளிலும் யூரியா போன்ற தழைச்சத்து உரங்களை அதிகமாக பயன்படுத்திய பகுதிகளிலும் மிகுந்து காணப்படும். எனவே வயல் வரப்புகளை சுத்தமாக வைத்துக் கொள்வதன் மூலமாகவும் பரிந்துரைக்கப்பட்ட தழைச்சத்திற்கு அதிகமாக இடாமல் மூன்று அல்லது நான்கு முறை பிரித்து இடுவதன் மூலமாகவும் இதன் தாக்குதலை கட்டுப்படுத்தலாம். மேலும் பறவை இருக்கைகளை வைத்து பறவைகளை கவர்ந்து புழுக்களை அழிக்கலாம்.

நெல் தண்டு துளைப்பான் மற்றும் நெல் இலைச்சுருட்டுப் புழு தாக்குதலைக் கட்டுப்படுத்திட ஏக்கருக்கு புளுபென்டியமைடு 20 டபுள்யூ ஜி என்ற மருந்து 50 கிராம் (அல்லது) புளுபென்டிய மைடு டபுள்யூ/டபுள்யூ எஸ்.சி என்ற மருந்து 20 மிலி (அல்லது) கார்டாப் ஹைட்ரோகுளோரைடு 50 எஸ்.பி என்ற மருந்து 400 கிராம் (அல்லது) குளோரான்ட்ரனிலிபுரோல் 18.5 எஸ்.சி என்ற மருந்து 60 மிலி இவற்றுள் ஏதேனும் ஒரு மருந்தினை ஒரு ஏக்கருக்கு 200 லிட்டர் நீரில் கலந்து தெளித்துக் கட்டுப் படுத்தலாம் என புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

விதையின் ஈரப்பதம் அறிந்து விதைகளை சேமிக்க வேண்டுகோள்!

'வித்தே விளைவின் ஆதாரம்' வேளாண் உற்பத்தியை பெருக்கி விவசாயிகளின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதில் விதைகளின் பங்கு இன்றியமையாதது. விதையின் ஈரப்பதம் என்பது விதை சேமித்துள்ள நீரின் அளவாகும். தரமான விதை, விளைச்சலில் 15% உயர வழிவகுக்கிறது. தமிழகத்தில் விதைக்கான உற்பத்தி ஆண்டு முழுவதும் நடைபெறுவதில்லை. எனவே அறுவடைக் காலத்தில் விதைகளை தகுந்த முறையில் சுத்திகரிப்பு செய்து சேமித்து வைக்க வேண்டும். விதைகளை சேமிக்கும் போது பூச்சிகள் மற்றும் நோய் தாக்குதலில் இருந்து பாதுகாப்பது மிகவும் முக்கியமானதாகும். புதிதாக அறுவடை செய்யப்பட்ட விதைகளில் ஈரப்பதம் 20% முதல் 25% வரை காணப்படும். இதனை 10% முதல் 13% வரை குறைக்க காலை வெயிலில் உலர்த்திய பின்னரே சேமிக்க வேண்டும்.

ஈரப்பதம் அதிகம் இருப்பின், விதையானது, பூச்சி தாக்குதலுக்கு உள்ளாகும் வாய்ப்பு அதிகம். விதை சேமிப்பின் மிகப்பெரிய சவாலாக கருதப்படுபவை புழுக்கள் மற்றும் பூச்சிகளாகும். இவற்றால் விளைச்சலில் 2.5% இழப்பு ஏற்படுகிறது. பூச்சிகளும், பூஞ்சாணங்களும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. இந்தப் பூச்சிகள் விதைகளை துளைத்து உண்டு சேதப்படுத்துவதுடன் அவற்றின் கழிவுகளை விதைக் குவியலில் சேர்த்து அந்த விதை குவியல் முழுவதையும் சேதப்படுத்திவிதைக் குவியலின் ஈரப்பதத்தினை அதிகமாக்கி அதனை பூஞ்சாணத் தாக்குதலுக்கு ஆளாக்கி விதைகளிலிருந்து துர்நாற்றம் வீச செய்கிறது. இதனால் விதையின் முளைப்புத்திறன் வீரியம் குறைந்து விதைப்பதற்;கு தகுதியற்றவை ஆகிறது.

விதைகள் அதிக முளைப்புத்திறனுடன் இருக்கவும், உரிய காலம் வரை சேமிக்கவும் நெல் – 13%, சோயா பீன்ஸ், சிறுதானியங்கள், பப்பாளி– 12%, பயறு வகைகள், நிலக்கடலை, சூரியகாந்தி, எள், கொத்தவரை, பீட் ரூட், பாலக்கீரை– 9%, முருங்கை, புளிச்சை, வெங்காயம், கத்திரி, மிளகாய், தக்காளி– 8% மற்றும் காலிப்பிளவர், முட்டைக்கோஸ், நூல்கோல், சுரை, பாகல், புடல், பீர்க்கு, பூசணி, பரங்கி, தர்பூசணி, வெள்ளரி – 7% பரிந்துரைக்கப்பட்ட ஈரப்பத அளவுகள் இருக்க வேண்டும்.

எனவே, கரூர் மாவட்ட விவசாயிகள் அதிக மகசூல் பெற்று அதிக லாபம் பெறவும் விதை இடுபொருள் செலவினைக் குறைக்கவும்,

தங்களிடம் உள்ள விதைகளை விதை மாதிரி ஒன்றுக்கு ரூ.80/- ஆய்வுக் கட்டணமாக செலுத்தி கரூர் காந்தி கிராமம், திண்ணப்பா நகர் முதல் தெருவிலுள்ள விதைப்பரிசோதனை நிலையத்தில் பரிசோதனை செய்து விதையின் தரம் அறிந்து விதைக்கவும், அறுவடை செய்த விதையினை அடுத்த விதைப்புக்கு சேமிக்கும் பட்சத்தில் உரியமுறையில் சேதமில்லாமல் அறுவடை செய்து, விதையின் ஈரப்பதம் அறிந்து கொண்டு, விதைகள் பூச்சி நோய் தாக்குதலுக்கு உள்ளாகாமல் சேமிக்குமாறு கரூர் விதைப் பரிசோதனை நிலைய மூத்த வேளாண் அலுவலர் க.ரமேஷ்குமார் மற்றும் வேளாண் அலுவலர் பா.வினோதா ஆகியோர் கேட்டுக் கொள்கின்றனர்.



நெல் பயிரில் பூச்சி / நோய் தாக்குதல் மற்றும் தடுப்பு முறைகள்?



தற்போது நிலவும் தட்பவெப்ப நிலை காரணமாக சாகுபடி செய்யப்பட்டுள்ள நெல்பயிரில், செம்பேன், தண்டு துளைப் பான் மற்றும் இலை ச்சுருட்டுப்புழு ஆகிய பூச்சிகளும் இலைப்புள்ளி நோய் மற்றும் பாக்டீரியா இலைக்கருகல் நோயும் ஆங் காங்கு தென்படுவதால் விவசாயிகள் ஒருங்கிணைந்த முறையில் எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பது குறித்து விரிவாக பார்ப்போம்.

செம்பேன் (RED MITE)

இதை சிவப்பு சிலந்தி என்றும் அழைக்கப்படும். இலையின் அடிப்பகுதியில், சிவப்பு/மஞ்சள் புள்ளிகள் தோன்றும். இலைகள் பழப்பு நிறமாக மாறி காய்ந்து போகும் அல்லது முழுமையாக மஞ்சள் நிறமாகும். இலைகளின் மேற்பரப்பில் நுண்ணிய வலைகள் அல்லது வெளிறிய புள்ளி காணப்படும். செம்பேன் தாக்குதலானது கோடை காலத்தில் அல்லது அதிக வெப்ப காலங்களில் அதிகமாக இருக்கும். எனவே நீர் மேலாண்மை சரியாக பாரமரிக்க வேண்டும். ஆரம்பத்தில் வேப்பங்கொட்டை கரைசல் 3% என்ற அளவில் தெளிக்கலாம். தாக்குதல் அதிகமாக தென்பட்டால் இதனைக் கட்டுப்படுத்திட புரோப்பர் கைட் மருந்து ஏக்கருக்கு 250 மி.லி.யுடன் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். தண்ணீரில் கலந்து தெளிக்கும் போது ஓட்டும் பசை சேர்த்து இலையின் அடிப்பகுதி முழுவதும் நன்றாக நனையும்படி தெளிக்க வேண்டும். இதனை மறுபடியும் தேவைபட்டால், 8 நாட்கள் இடைவெளியில், மீண்டும் ஒருமுறை தெளிக்க வேண்டும்.

தண்டு துளைப்பான் (STEM BORER)

குருத்துப்பூச்சி எனப்படும் தண்டு துளைப்பானின் தாக்குதலால் இளம் பயிரில் நடுக்குருத்து வாடி காய்ந்து விடும். கதிர் பிடிக்கும் தருணத்தில் தாக்குதல் ஏற்பட்டால், நெல் மணிகள் பால் பிடிக்காமல், வெண் கதிராக மாறி மகசூல் பாதிக்கும். இதனை கட்டுப்படுத்த நாற்றுகளை தகுந்த இடைவெளியில் நட வேண்டும். நெருக்கமாக நடவு செய்யக்கூடாது. தழைசத்து உரத்தை முழுமை யாக இடாமல் 2-3 தடவைகளில் பிரித்து இட வேண்டும். முதிர்ந்த நாற்றுகளை நடும்போது அவற்றின் நுனியை கிள்ளி விட்டு நட

வேண்டும். அவ்வாறு செய்வதால் நுனித்தோகையில் குருத்துப் பூச்சிகளின் முட்டை குவியலாக அழிந்து விடலாம். மாலை 6 மணி முதல் 8 மணி வரை மின் விளக்கு எரிய விட்டு குருத்துப் பூச்சி களின் தாய் அந்து பூச்சிக்களை கவர்ந்து அழிக்கலாம்.

இலைச்சுருட்டுப் புழு (LEAF ROLLER)

இவை நெற்பயிரின் இலைகளை ஒன்றிணைத்து கொண்டு அவற்றில் உள்ள பச்சையத்தை சுரண்டி உண்பதால், இலைகள் வெள்ளை வெள்ளையாக (PAPERY TISSUES) மாறி விடும். வயலின் ஓரங்களில், நிழலான இடங்களில் அதிகபடியான தழைச்சத்து இடுவதால், வயல்களை வரப்பு ஓரங்களில் எடுக்க வேண்டும், சுத்தமாக வைக்க வேண்டும். ஆங்காங்கு பறவை தாங்கிகளை வைத்து தாய் அந்து பூச்சிகளை கட்டுப்படுத்தலாம்.

நெல் தண்டுத்துளைப்பான் மற்றும் இலைச்சுருட்டு புழு தாக்கு தலை கட்டுபடுத்த ஏக்கருக்கு புளுபெண்டாமைடு 20W மருந்தை 50 கிராம் 200 லிட்டர் தண்ணிரில் கலந்து தெளிக்கலாம். கார்டாப் ஹைட்டிரோ குளோரைடு ஏக்கருக்கு 5 கிலோ மணலில் கலந்து தெளிக்கலாம்.

நோய்கள்

1) இலைப்புள்ளி நோய்

இது இலைகளில் செங்கல் வடிவ புள்ளிகள் காணப்படும். இலை களில் இவை நீள் வட்ட வடிவ புள்ளியிலிருந்து பழுப்புநிறமாக மாறி இலைகள் கருகி விடும். தொடர்ந்து பனிப் பொழிவு மேகமூட்டம் சாரல் போன்ற தட்ப வெப்ப நிலைகளில் அதிகமாக தென்படும்

தடுப்பு முறை : விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும். கட்டுப்படுத்த சூடோமோனஸ் 2 கிலோ மணலுடன் கலந்து தூவி விட வேண்டும்.

2) பாக்டீரியா இலைக்கருகல் நோய்

இது பயிரின் அனைத்து நிலைகளில் காணப்படும். இலைகளின் நுனிப்பகுதி வெளிர் பச்சை நிறமாக மாறி மஞ்சள் நிறம் உள் நோக்கி பரவி நாளடைவில் நீர்த்து காணப்படுவதுடன் கீழே முழுவதும் கருகி இருக்கும்.

கட்டுப்படுத்தும் முறை : தழைசத்து உரத்தை பிரித்து இட வேண்டும். களைகள் அகற்றிட வேண்டும். ஆரம்ப நிலையில் சாணக்கரைசல், சூடோமானஸ், பஞ்சகாவியா, பேசில்லஸ் போன்ற வற்றில் ஏதேனும் ஒன்று அல்லது இரண்டை கலந்து தெளிக்க

வேண்டும். நோயின் தாக்குதல் அதிகமாக இருந்தால் காப்பர் ஆக்ஸிகுளோரைடு தெளிக்கலாம்.

பொதுவாக பூச்சி/ நோய் தாக்குலைத் தடுக்க வயலில் தண்ணீர் காய்ச்சலும் பாய்ச்சாலுமாக இருக்க வேண்டும். தழைசத்து உரங்களை பிரித்து பிரித்து போட வேண்டும். அடியுரமாக வேப்பம் புண்ணாக்கு ஜிப்சம் இடலாம். களைகள் அகற்றிட வேண்டும்.

மேலுரமாக பொட்டாஷ் போட வேண்டும் பெரும்பாலான விவசாயிகள் நெல் பரியும் போது தான் பொட்டாஷ் உரத்தை போடுகின்றனர், இது தவிர்க்க வேண்டும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

விவசாயிகள் திக்ஷின் மேம்பாட்டு பயிற்சி



திண்டுக்கல், நவ.17

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் வட்டம், அட்மா திட்டத்தின் கீழ் மாவட்டத் திற்குள்ளான விவசாயிகள் திக்ஷின் மேம்பாட்டு பயிற்சி டி.புதுப்பட்டி கிராமத்தில் நடை பெற்றது. இதில் வேளாண்மை உதவி இயக்குனர் பழனிச்சாமி அறிவுரையின்படி பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சிக்கு காந்திகிராம் வேளாண் பல்கலைக் கழக துணைவேந்தர் ரங்கநாதன் (ஓய்வு) கலந்து கொண்டு மக்காச் சோளம் பயிர் பாதுகாப்பு முறை மற்றும் படைப்புழு தாக்குதல், நீர் மேலாண்மை, உர மேலாண்மை பற்றி விவசாயிகளுக்கு தெளிவாக எடுத்துக் கூறினார். மற்றும் விவசாயிகளின் சந்தேகங் களுக்கும் பதில் அளித்தார். இப்பயிற்சியில் மதுரை வேளாண் கல்லூரி கிராம தங்கல் மாணவர்கள் விதை சான்றிதழ் பெறும் முறை பற்றி மிகத் தெளிவாக எடுத்துக் கூறினார். மற்றும் வானவ ராயன் வேளாண்மை கல்லூரி மாணவர்கள் பஞ்சகாவியம் தயாரிக்கும் முறை மற்றும் அதன் செயல்முறை விளக்கத்தை விவசாயிகளுக்கு செய்து காட்டினர். மற்றும் ஒருங்கிணைந்த பண்ணைய சாகுபடி முறை பற்றியும் விவசாயிகளுக்கு தெளிவாக எடுத்துக் கூறினர். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை வட்டார தொழில் நுட்பம் மேலாளர் மற்றும் உதவி தொழில்நுட்பம் மேலாளர்கள் பொன் தமிழரசு அருண்குமார் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

Rithvik Pipe

25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



பைப் மட்டும் வாங்காமல் நம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம் நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள் ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள் தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தலைப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள் அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன் ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

ISI PVC PIPE -	ASTM UPVC PIPE -	ISI CONDUIT PIPE -	ISI PLUMBING PIPE -	ISI BOREWELL CASING PIPE -
20mm to 250mm (All Classes)	21mm to 114mm (SCH 40, SCH80)	16mm to 63mm (Light, Medium, Heavy)	25mm to 50mm (15KG)	125mm to 250mm

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

நெல் பயிரில் புகையான் கட்டுப்பாடு



நெல் பயிரில் புகையான் பூச்சியின் தாக்குதல், பயிர் நன்கு தூர் கட்டும் நிலையி லிருந்து மணிபிடித்து முற்றும் வரையில் அதிகம் இருக்கும் என்றும் அவை நெற்பயிரின் தூர்களின் அடிபாகத்தில் இருந்து கொண்டு பயிரின் சாற்றை உறிஞ்சுவதால் பயிர் திட்டு திட்டாக வட்டவடிவில் காயத் தொடங்கி நெற்பயிர் எரிந்து புகைந்து விட்டதை போல் காணப்படும் எனவும் புகையான் பூச்சியினை உழவியல், இரசாயன, உயிரியல் முறைகளை கையாண்டு கட்டு படுத்தலாம் எனவும் வாலாஜா வட்டார வேளாண் உதவி இயக்குனர் திலகவதி தெரிவித்துள்ளார்.

எதிர்ப்பு திறன் கொண்ட இரகங்களான கோ 42, ஆடுதுறை 37 ஆகிய இரகங்களை பயிரிடலாம். நெருக்கமாக நடுவதை தவிர்த்து நடவு வயலில் 8 அடிக்கு ஒரு அடி பட்டம் விட்டு நடவு செய்து, தழைச்சத்தினை அதிகமாக இடுவதை தவிர்த்து 3 அல்லது 4 முறை பிரித்து இடவேண்டும். வயல்களில் தண்ணீர் தேங்கியுள்ள இடங்களில் பூச்சி தாக்குதல் அதிகமிருக்கும், எனவே தாக்குதலின் ஆரம்ப கட்டத்தில் 3-4 நாட்களுக்கு நெல் வயலில் தண்ணீரை வடிகட்டுவது நல்லது. புகையான் தாக்குதலை கண்காணிக்க ஏக்கருக்கு 1-2 மீ உயரத்தில் ஒளிரும் ஒளியுடன் கூடிய விளக்குப் பொறிகளை நிறுவி, விளக்கு பொறியின் அடிப்பகுதியில் தண்ணீர் நிரப்பப்பட்ட தொட்டியை வைத்து மண்ணெண்ணெய் சேர்த்து அதில் சிக்கிய பூச்சிகளை அழிக்க வேண்டும்.

பொருளாதார சேத நிலையில் பூச்சிகள் தென்பட்டால் இரசாயன முறைகளைப் பின்பற்ற வேண்டும். இரை விழுங்கி சிலந்தி இல்லாத நிலையில் தூருக்கு 1 புகையான் பூச்சி இருத்தாலோ இரை விழுங்கி சிலந்தி தூருக்கு 1 இருக்கும் நிலையில் தூருக்கு 2 பூச்சி இருத் தாலோ புகையானின் பொருளாதார சேத நிலையாகும். பூச்சிக் கொல்லிகளைப் பயன்படுத்துவதற்கு முன் தண்ணீரை வடிகட்டி, பூச்சிகொல்லியை செடிகளின் அடிப்பகுதியை நோக்கி ஒரு எக்டருக்கு அசாடிராக்டின்-0.03% - 1000 மி.லி, வேப்ப எண்ணெய் 3% - 15 லி, பியபுரோபேசின்- 25% - 800 மி.லி, குளோரான் டிரானிலிபுரோல் - 18.5% - 150 கிராம், டைனோடிபியுரான் 20% - 200 கிராம், பெனோபுகார்ப்- 50% 500 மி.லி, பைமெட்ரோசைன்-

50%, 300 கிராம் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றை தெளித்து புகையான் பரவுவதை தவிர்க்கவேண்டும் என வாலாஜா வட்டார வேளாண் உதவி இயக்குனர் தெரிவித்தார்.

படியம்பாக்கம் கிராமத்தில், வாலாஜா வட்டார வேளாண் உதவி இயக்குனர் திலகவதி நெல் பயிரில் புகையான் தாக்குதலை பார்வையிட்டு பொருளாதார சேத நிலையில் புகையான் பூச்சிகள் தென்பட்டதால் தண்ணீரை வடிகட்டி, பூச்சிகொல்லியை செடிகளின் அடிப்பகுதியை நோக்கி பயன்படுத்திட பரிந்துரை செய்தார். உதவி தோட்டகலை அலுவலர் முனியப்பன் உடன் இருந்தார்.

நெற்பயிரில் பூச்சிகளைக் கட்டுப்படுத்த பொறிவலைகள் செயல்விளக்கம்!



திருவண்ணாமலை, நவ.17

ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) ஒரு பகுதியாக, திருவண்ணா மலை மாவட்டம், வாழவச்சனூர் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவர்கள், கடலூர் மாவட்டம், சாத்தமங்கலம் கிராமத்தில் நெற்பயிரில் பூச்சிகளைக் கண்காணித்து கட்டுப்படுத்தும் பொறிவலைகள் குறித்த செயல்விளக்கத்தை மேற்கொண்டனர்.

இதில், தண்டு துளைப்பானைக் கவர்ந்து பிடிக்க இன கவர்ச்சி பொறியும், இலைத்தத்துப்பூச்சி மற்றும் வெள்ளை ஈக்களைக் கட்டுப்படுத்த மஞ்சள் ஒட்டுப்பொறியும், இலைபேனை கண்காணிக்க நீல ஒட்டுப்பொறியும் அறிமுகப்படுத்தப்பட்டன.

இனக்கவர்சி (pheramone) பொறியில் பெண் பூச்சியின் மணத்தை ஒத்த செயற்கை பெரோமோன் பயன்படுத்தி ஆண் பூச்சிகள் கவரப்படுகின்றன. மஞ்சள் மற்றும் நீல ஒட்டுப்பொறிகள் பூச்சிகளை அவற்றின் நிறத்தால் ஈர்த்து, ஒட்டும் தன்மையின் மூலம் பிடிக்கின்றன. இப்பொறிகளை ஒரு ஏக்கருக்கு 2 முதல் 4 வரை பயன்படுத்திப் பூச்சிகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்கலாம் என விளக்கப்பட்டது.

இச்செயல்விளக்கத்தின் மூலம் விவசாயிகளுக்கு சுற்றுச்சூழலுக்கு உகந்த பூச்சி கண்காணிப்பு முறைகள் மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மையில் பொறிவலைகளின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இயற்கை வேளாண்மை சான்றிதழ் பெறுவது குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு!



திண்டுக்கல், நவ.17

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார் சத்திரம் வட்டாரத்திற்குட்பட்ட டி.புதுப்பட்டி கிராமத்தில் 16.11.26 அன்று மதுரை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த இளங்கலை வேளாண்மை மாணவர்கள் சார்பில், ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ் விவசாயிகளுக்கான இயற்கை வேளாண்மை சான்றிதழ் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மொத்தம் 47 விவசாயிகள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் இயற்கை வேளாண்மையின் முக்கியத்துவம், இயற்கை வேளாண்மை சான்றிதழ் பெறுவதற்கான நடைமுறைகள் மற்றும் அதற்கான விதிமுறைகள் குறித்து விவசாயிகளுக்கு விரிவாக விளக்கமளிக்கப்பட்டது.

இந்தியாவில் நடைமுறையில் உள்ள பங்கேற்பு உத்தரவாத முறை (PGS-India) மற்றும் தேசிய இயற்கை உற்பத்தித் திட்டம் (NPOP) ஆகிய இரண்டு முக்கிய சான்றிதழ் முறைகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது. சான்றிதழ் பெறுவதற்கான பதிவு செய்தல், தேவையான ஆவணங்களைச் சமர்ப்பித்தல், நில ஆய்வு, பண்ணைப் பதிவேடுகளைப் பராமரித்தல் மற்றும் சரிபார்ப்பு போன்ற படி நிலைகள் விளக்கப்பட்டன.

மேலும், ரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளைத் தவிர்த்தல், அங்கீகரிக்கப்பட்ட இயற்கை இடுபொருட்களைப் பயன்படுத்துதல், பண்ணைப் பதிவேடுகளை முறையாகப் பராமரித்தல் மற்றும் அருகிலுள்ள ரசாயன வேளாண்மை நிலங்களிலிருந்து மாசுபடுவதைத் தடுத்தல் போன்ற முக்கிய விதிமுறைகள் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது.

இயற்கை வேளாண்மை சான்றிதழ் பெறுவதன் மூலம் விளை பொருட்களுக்கு சந்தையில் கூடுதல் வாய்ப்புகள் கிடைத்தல், நுகர்வோரின் நம்பிக்கையைப் பெறுதல், மண் வளத்தைப் பாது காத்தல், சுற்றுச்சூழலை மேம்படுத்துதல் மற்றும் விளைபொருட் களுக்கு சிறந்த விலை கிடைப்பதற்கான வாய்ப்புகள் ஏற்படுதல் போன்ற நன்மைகள் குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் விவசாயிகள் மிகுந்த ஆர்வத்துடன் பங்கேற்று, மாணவர்கள் வழங்கிய தகவல்களைக் கவனமாகக் கேட்டறிந்தனர். மேலும், இயற்கை வேளாண்மை மற்றும் நவீன வேளாண் தொழில் நுட்பங்கள் தொடர்பாக இதுபோன்ற விழிப்புணர்வு நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்றும் தங்களது விருப்பத்தைத் தெரிவித்தனர்.

இந்நிகழ்ச்சியில் வேளாண்மை மாணவர்களான விஷ்ணு ம, வினோத் குமார் சு, விக்னேஸ்வரன் இரா ஜெ, தீபக்முருகன் வே, அரவிந்த், ராகுல் அ, லிங்கேஷ்வரன் ச, மோதிலால் வெ மற்றும் பார்த்திபன் கிருஷ்ணா சி ஆகியோர் பங்கேற்று விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.



வீரகனூர் துணை வேளாண்மை விரிவாக்கம் மையத்தில் 'கிசான் கோஸ்தி' விவசாயிகள் பயிற்சி முகாம்



சேலம், நவ.17

சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டாரம், வீரகனூர் துணை வேளாண்மை விரிவாக்கம் மையத்தில் வேளாண்மைத் துறை மற்றும் அட்மா (ATMA) திட்டம் சார்பில் 'கிசான் கோஸ்தி' விவசாயிகள் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது. தலைவாசல் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் வேல்முருகன் வரவேற்றுப் பேசினார். சேலம் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சீனிவாசன் தலைமை தாங்கி, விவசாய அடையாள அட்டையின் (Farmer ID) முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தார்.

நிகழ்ச்சியில் வேளாண்மை அலுவலர் ஜானகி விவசாய அடையாள எண் மூலம் உரங்கள் வாங்கும் முறை குறித்தும், துணை வேளாண்மை அலுவலர் மணவழகன் வேளாண்மைத் துறை திட்டங்கள் குறித்தும், வேளாண்மை அலுவலர் சுரேந்தர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் பொருளீட்டுக் கடன் பெறும் முறை குறித்தும், உதவிப் பொறியாளர் கஜலட்சுமி 'உழவன் செயலி' மூலம் மானியத் திட்டங்கள் பெறுவது குறித்தும் விளக்கமளித்தனர். தொடர்ந்து உதவி தோட்டக்கலை அலுவலர் அருள்செல்வன் தோட்டக்கலைத் துறை மானியங்கள் குறித்தும், வன அலுவலர் வெங்கடேசன் இலவச மரக்கன்றுகள் வழங்குதல் மற்றும் வனவிலங்கு பயிர் சேத நிவாரணம் குறித்தும், கால்நடை மருத்துவர் பிரபாகரன் 'வெற்றி மகளிர் திட்டம்' மூலம் ஆடு வாங்குதல் மற்றும் கால்நடைத் திட்டங்கள் குறித்தும், சுகாதார ஆய்வாளர் பிரபாகரன் நோயின்றி ஆரோக்கியமாக வாழும் வழிமுறைகள் குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர். மேலும், உதவி வேளாண்மை அலுவலர்கள் சுப்பிரமணியன், வித்யா, தமிழ்ச்செல்வன், சந்தோஷ், கணேஷ்மூர்த்தி ஆகியோர் விவசாயிகளுக்கு நேரில் விவசாய அடையாள எண் பதிவு செய்து கொடுத்தனர். வேளாண்மைத் துறை மானியத் திட்டக் கண்காட்சியில் தந்தை ரோவர் மற்றும் ஜே.எஸ்.ஏ (JSA) வேளாண் கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டு நவீன தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்குக் காட்சிப்படுத்தி விளக்கினர். அட்மா திட்ட அலுவலர்கள் சக்தி, முத்துவேல் மற்றும் ரமேஷ் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்ச்சியில் 100-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

மண்புழு உரம் தயாரித்தல் குறித்த விவசாயிகளுக்குப் பயிற்சி!



சிவகங்கை, நவ.17

சிவகங்கை மாவட்டம், காளை–யார்கோவில் பகுதியில், சேது பாஸ்கரா வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் IV ஆண்டு இளங்கலை (வேளாண்மை) மாணவியர்கள் சார்பில், ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ் விவசாயி களுக்கு மண்புழு உரம் தயாரித்தல் குறித்த பயிற்சி வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியானது மாணவிகளான பா.மகேஸ்வரி, சு.சந்தியா, செ.யாழினி, க.விவேகா, கு.கீர்த்தனா, செ.ஸிவஸ்ரீ மற்றும் செ.ராஜேஸ்வரி ஆகியோரால் சிறப்பாக நடத்தப்பட்டது.

இப்பயிற்சியில் மண்புழு உரத்தின் முக்கியத்துவம், உரம் தயாரிக்கத் தேவையான மூலப்பொருட்கள், மண்புழுக்களின் வகைகள், உரப்படுக்கை அமைக்கும் முறை, ஈரப்பதத்தைப் பரா மரித்தல், உரம் அறுவடை செய்தல் மற்றும் வயல்களில் பயன் படுத்தும் முறைகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளிக்கப் பட்டது.

மேலும், விவசாயக் கழிவுகள் மற்றும் கால்நடைக் கழிவுகளைப் பயன்படுத்தி குறைந்த செலவில் தரமான மண்புழு உரம் தயாரிப்பது குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது. மண்புழு உரம் மண்ணின் வளத்தை மேம்படுத்துவதோடு, மண்ணின் கட்டமைப்பு, நுண்ணு யிர்களின் செயல்பாடு மற்றும் பயிர்களின் ஊட்டச்சத்து கிடைக்கும் தன்மையை அதிகரிக்க உதவுகிறது என்பதையும் விளக்கினர்.

இயற்கை முறையில் மண்ணின் ஆரோக்கியத்தைப் பாது காக்கவும், இரசாயன உரங்களின் பயன்பாட்டைக் குறைக்கவும் மண்புழு உரம் தயாரிப்பை விவசாயிகள் ஊக்குவித்துப் பின்பற்ற வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

இப்பயிற்சியின் மூலம் விவசாயிகள் மண்புழு உரம் தயாரித்தல் மற்றும் இயற்கை வேளாண்மையில் அதன் பயன்பாடு குறித்த பயனுள்ள தொழில்நுட்ப அறிவைப் பெற்றனர்.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

மக்காச்சோளத்தில் படைப்புழு மேலாண்மை பயிற்சி



மதுரை, நவ.17

மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டாரம், காண்டை கிராமத்தில் மக்காச் சோளத்தில் படைப்புழு மேலாண்மை குறித்த பயிற்சி நடைபெற்றது. பயிற்சியில் கலந்து கொண்டு பேசிய மதுரை வேளாண்மை அறிவியல் நிலைய முதன்மை விஞ்ஞானி மற்றும் தலைவர் கி.சுரேஷ், கூறுகையில் மக்காச்சோளத்தில் தாக்கக்கூடிய படைப்புழு வாழ்க்கை சரிதம் மற்றும் புழு வினால் ஏற்படக்கூடிய தாக்குதலின் அறிகுறிகள் மற்றும் புழுவை கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த முறையில் மேற்கொள்ள வேண்டிய பூச்சி கட்டுப்பாட்டு வழிமுறைகளை எடுத்துரைத்தார்.

குறிப்பாக ஆண் அந்து பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கக்கூடிய இனக்கவர்ச்சி பொறிகளை ஒரு ஏக்கருக்கு நான்கு முதல் ஐந்து பொறிகளை வைத்து கண்காணித்து அழிக்க வேண்டும். புழு தாக்குதல் அதிகமாக தென்பட்டால் பின்வரும் மருந்துகளில் ஏதேனும் ஒன்றினை 15 நாட்கள் இடைவெளியில் தெளித்து கட்டுப்படுத்தலாம். எமெக்டின் பென்சோயேட் 5 SG (0.4g/1 லிட்டர் தண்ணீர்) அல்லது குளோரான்ட்ரானிலிப்ரோல் 18.5 SC (0.4ml /1 லிட்டர் தண்ணீர்) அல்லது ஸ்பைனிட்டோரம் 11.7% SC (0.5 ml/1 லிட்டர் தண்ணீர்) மேலும் பயிற்சியில் கலந்து கொண்டவர்களுக்கு இனக்கவர்ச்சி பொறி மற்றும் லூர் வழங்கப்பட்டது. பயிற்சியில் கலந்து கொண்ட வேளாண்மை உதவி இயக்குனர் திருமங்கலம் வட்டாரத்தில் செயல்படுத்தப் படும் வேளாண்மை துறை திட்டங்களை பற்றி எடுத்துரைத்தார். வேளாண் அலுவலர் பேசுகையில் விவசாய அடையாள அட்டை பெறுவதில் வழிமுறைகள் மற்றும் பெறுவதின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தார். பயிற்சியில் 60க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.

Rithvik Pipe

25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



பைப் மட்டும் வாங்காமல் நம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம் நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள் ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள் தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தலைப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள் அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன் ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

ISI PVC PIPE -	ASTM UPVC PIPE -	ISI CONDUIT PIPE -	ISI PLUMBING PIPE -	ISI BOREWELL CASING PIPE -
20mm to 250mm (All Classes)	21mm to 114mm (SCH 40, SCH80)	16mm to 63mm (Light, Medium, Heavy)	25mm to 50mm (15KG)	125mm to 250mm

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

3ஜி கரைசல் தயாரிப்பு மற்றும் பயன்பாடு குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திய மாணவிகள்



திருச்சி, நவ.17

அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் (ADAC & RI), 12 (RAWE) மாணவிகள், திருச்சி சிறுகமணி ICAR–KVK மையத்தில் விவசாயிகளுக்கான விழிப்புணர்வு மற்றும் செயல்விளக்க நிகழ்ச்சியை நடத்தினர்.

இந்நிகழ்ச்சியில் இயற்கை முறையில் பூச்சிகளைக் கட்டுப்படுத்த உதவும் 3ஜி கரைசல் தயாரிப்பு, அதன் பயன்கள், பயிர்களில் ஏற்படும் பூச்சி மற்றும் நோய் மேலாண்மை முறைகள் குறித்து மாணவர்கள் விளக்கினர்.

இஞ்சி, பூண்டு, பச்சை மிளகாய் ஆகிய மூன்று பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படும் 3ஜி கரைசலின் தயாரிப்பு முறையை மாணவிகள் நேரடியாகச் செய்து காண்பித்தனர். மேலும், இக் கரைசல் அசுவினி, வெள்ளை ஈ, திரிப்ஸ் மற்றும் இலை உண்ணும் புழுக்கள் போன்ற பூச்சிகளின் தாக்குதலைக் குறைக்க உதவும் என்பதை எடுத்துரைத்தனர்.

இக்கரைசல் இயற்கை முறையில் பூச்சிகளை விரட்ட உதவுவதுடன், இரசாயன பூச்சிக்கொல்லிகளின் பயன்பாட்டைக் குறைத்து சுற்றுச்சூழலுக்கு உகந்த வேளாண்மையை ஊக்குவிக்கிறது என்றும் விளக்கினர். மேலும், 5 சதவீத கரைசல் என்ற பரிந்துரைக் கப்பட்ட செறிவில், ஒரு லிட்டர் தண்ணீருக்கு 50 மில்லி கரைசல் என்றளவில் கலந்து தெளிக்கும் முறையையும் எடுத்துரைத்தனர்.

பயிர்களில் ஏற்படும் பூச்சித் தாக்குதல்களைக் கட்டுப்படுத்துவதோடு, நோய்களைத் தடுக்க வயல் சுத்தம், நோயற்ற விதைகள், பயிர் சுழற்சி மற்றும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளைப் பின்பற்ற வேண்டியதன் அவசியத்தையும் மாணவர்கள் விளக்கினர்.

இதில் 12 மாணவிகளான பூமிகா ஆ, சாரு நேத்ரா க.ச, புவனேஸ்வரி செ, ஃபர்ஹானா மைமூன் கா, கங்கா வ, ஹரணி தி.மு., தீபிகா வ., கோபிகா ச., ஹேமவர்ஷினி இ., திரிவேணி, ஹரினியா பா

மற்றும் இந்துமதி க, ஆகியோர் பங்கேற்று செயல்விளக்கம் அளித்தனர்.

இயற்கை இடுபொருட்களைப் பயன்படுத்தி குறைந்த செலவில் பயிர்களைப் பாதுகாக்கும் முறைகள் குறித்து விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திய இந்நிகழ்ச்சி பயனுள்ளதாக அமைந்தது.

பாதிப்படைந்த நெல் வயலினை பார்வையிட்ட வேளாண் அலுவலர்கள்



திருவள்ளூர், நவ.17

திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி வட்டாரம், வேளாண்மைத் துறை வேளாண்மை உதவி இயக்குநர் திருவள்ளூர் தெய்வேந்திரன் மற்றும் வேளாண்மை அலுவலர் பூந்தமல்லி சமீரா ஆகியோர் பாதிப்படைந்த நெல் வயலினை பார்வை யிட்டனர். நெற்பயிரில் குருத்துப்பூச்சி மற்றும் இலை சுருட்டு புழுவின் தாக்குதல் மேலாண்மை ஏக்கருக்கு கார்டாப் ஹைட்ரோ குளோரைடு (50% SP) 400 கிராம் அல்லது குலோரான்ட்ரிநிலிபுரோல் (Coragen) 60 மில்லி மருந்தினை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்து கட்டுப்படுத்த கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நெல்லில் பாசி, பாக்டீரியா இலை கருகலுக்கு மேலாண்மை

பொதுவாக அதிக வெப்பம், சூரிய ஒளி மற்றும் அடி உரம் அதிகமாக இடுதல் போன்ற காரணங்களால் இதன் பாதிப்பு அதிகரிக் கின்றது. பச்சை பாசிகளானது நீரின் மேற்பரப்பில் அடர்த்தியாக படர்ந்து பயிர்களுக்கு போதிய பிராணவாயு கிடைப்பதை தடுக் கின்றது. இதனைக் கட்டுப்படுத்த கோனோ களையெடுக்கும் கருவினை கொண்டு பாசிகளை கலைத்து விடுமாறும் மேலும் அதிக தாக்குதலுக்கு உள்ளான நெல் வயல்களில் 2.5 கிராம் காப்பர் ஹைட்ராக்சைடுயை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம் அல்லது ஏக்கருக்கு 2 கிலோ காப்பர் சல்பேட் 20 கிலோ மணலுடன் கலந்து வயலில் சீராக இடலாம் எனவும் அறிவுறுத்தப்பட்டது.

பாக்டீரியா இலை கருகலுக்கு

பெசில்லஸ் சப்டிலிஸ் 5-10 கிராம்/லிட்டர் (அ) காப்பர் ஆக்சி குளோரைடு 2 கிராம்/ஏக்கர் தெளிக்கலாம் என அறிவுறுத்தப்படு கிறது.

தாவர நாற்றங்கால் உதவியாளர் பயிற்சி நிறைவு விழா



கன்னியாகுமரி, நவ.17

கன்னியாகுமரி வேளாண்மை அறிவியல் நிலையத்தில் கடந்த 12 ஆம் தேதி முதல் அரசு பள்ளி மாணவர்களுக்கு தாவர நாற்றங்கால் உதவியாளர் பயிற்சி நடைபெற்று வந்தது. பயிற்சியின் துவக்க நாள் அன்று தோட்டக்கலை துணை இயக்குநர் வ.ஸ.நக்கீரன், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டுபயிற்சியினை துவங்கி வைத்தார். பயிற்சியின் கடைசி நாளான 6-11-26 பயிற்சியின் நிறைவு விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு வேளாண்மை அறிவியல் நிலைய மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் சா.சுரேஷ், அரசு பள்ளி மாணவர்களுக்கு நிறைவு உரையாற்றினார். தனது நிறைவு உரையில் மாணவர்கள் கற்றுக் கொண்ட தொழில்நுட்பங்களை பயன்படுத்தி சிறந்த தொழில்முனைவோராக மாற வேண்டும் என கூறினார். தோட்டக்கலை தொழில்நுட்ப வல்லுநர் முனைவர் ஞா.சாம்லின்ட் சுஜின் நன்றி உரை ஆற்றினார். வேளாண் அறிவியல் நிலைய வல்லுநர்கள் மற்றும் ஆசிரியர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பயிற்சி குறித்த கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர்.

பருத்தியூர் கிராம விவசாயிகளுக்கு கிசான் கடன் அட்டை (KCC) குறித்த விழிப்புணர்வுப் பயிற்சி!

நாகப்பட்டினம், நவ.17

நாகப்பட்டினம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த வேளாண் மாணவர்கள், ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ் குடவாசல் வட்டாரத்தில் தங்கி, இன்று பருத்தியூர் கிராம விவசாயிகளுக்கு கிசான் கடன் அட்டை (Kisan Credit Card – KCC) திட்டம் குறித்த விழிப்புணர்வுப் பயிற்சி அளித்தனர்.

இப்பயிற்சியில், கிசான் கடன் அட்டையின் பயன்பாடுகள், முக்கியத்துவம் மற்றும் விவசாயிகளுக்குக் கிடைக்கும் நன்மைகள் குறித்து விளக்கினர். பயிர் சாகுபடிக்குத் தேவையான விதைகள்,

உரங்கள் மற்றும் பிற இடுபொருட்களை வாங்குவதற்கான கடன் வசதிகள், வட்டி சலுகைகள் மற்றும் இத்திட்டத்தின் கூடுதல் பயன்கள் குறித்தும் எடுத்துரைத்தனர்.

மேலும், கிசான் கடன் அட்டையைப் பெறுவதற்கான தகுதிகள், விண்ணப்பிக்கும் முறை மற்றும் தேவையான ஆவணங்கள் குறித்தும் விளக்கினர்.

அருகிலுள்ள வங்கிகள் அல்லது தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் எவ்வாறு விண்ணப்பித்து கடன் அட்டையைப் பெறலாம் என்பது குறித்தும் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

